முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1642

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.03.2024,** வியாழக்கிழமை

1. அண்ணலே கலியுகத்தைக் காக்கவந்த
   ஆறுமுகனார் என் அம்சமான வள்ளலே
   மண்ணுலகம் உன் சேவைவழிதான்
   மகத்துவம் பெறும் என்று கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும் குறைவில்லா ஞான அறிவுரை ஆசி
   குவலயத்தில் சோபகிருது சேல் திங்கள்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 15 ம் நாள், 28.03.2024, வியாழக்கிழமை)
   அறிவிப்பேன் அரங்கனுக்கு சக்தி கூட
   ஆற்றல்மிகு அரங்கமகான் சர்வபலம் பெற
3. சர்வபலம் பெற ஆறுமுகனார் யானும்
   சடாட்சரமாக சக்தியாய் கலந்து அரங்கன் உள்ளே
   தடையின்றி நாளும் நாளும் அற்புதம் நடத்துகின்றேன்
   தக்கபடி அரங்கனுக்கு வல்லமை கூட்டி
4. கூட்டியே பிரம்ம வேளை அனுதினமும்
   குருஅருளாக திருவருள் தன்னை
   வாட்டமற அரங்கனுக்கு வழங்கி நின்று
   வருபவர்க்கு தீட்சையாக மாறி அற்புதம் படைக்கின்றேன்
5. ஆகவே உலகோர் அரங்கன் தொடர்பு கொண்டால்
   அனைவருக்கும் ஞான சித்தி உறுதி உறுதி
   தடையற அரங்கன் தர்மம் ஏற்று
   தமிழகம் மற்ற தரணி எங்கும் அன்னசேவை ஆற்றி வந்தால்
6. வருகின்ற மக்களுக்கு வல்லமைபட தர்ம ஞான பலமோடு
   வறுமை சர்வ சோடைகளை வெல்லுகின்ற
   வெல்லுகின்ற மகா சக்தி கூடி
   வையகத்தையே மாற்றும் வரமும் பலமும்

7. அரங்கன் கரம் பட
தீட்சையாகக் கிட்டி ஆற்றல்பட
உலக மாற்றம் நிகழக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

**–சுபம்–**